Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.6/2025

Dated 23-02-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | வயது | : | 37 |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | வடக்குவாசல் | தொழில் | : | கொத்தனார். |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present/absent 355 BNSS Petition filed and allowed.**

**Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

**2880** செந்தில்குமார்

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போதுதஞ்சாவூர் வடக்கு வாசலில் குடியிருக்கிறேன். கொத்னார் வேலை செய்து

வருகிறேன்.

2)இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

3)இறந்துபோன அற்புதத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

4)போலிசார் என்னை விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. அற்புதம் என்கிற வக்கில் குமாஸ்தாவை கொலை செய்யப்பட்டதாக சொல்லும் தேதி அன்று நான் வீட்டில் படுத்து இருந்தேன். இரவு 11.30 மணிக்கு என்னை போலிசார் கூப்பிட்டார்கள்.அவர்கள் 4,5 பேர் இருந்தார்கள். அவர்கள் எந்த காவல்நிலையம் என்று தெரியாது. கொலை நடந்தது தெரியுமா என்று கேட்டார்கள். நான் எனக்கு தெரியாது என்று சொன்னேன். வேலைக்கு போய்விட்டு தற்போதுதான் வந்தேன் என்று சொன்னேன்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரிக்கும்போது 20.5.2024 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் என் வீட்டிற்கு வெளியே நின்றுக்கொண்டிருக்கும்போது இரண்டு நபர்கள் வந்து அற்புதம் வீட்டு கதவை தட்டினார்கள் என்றும்,

2) அற்புதம் வந்து வாசல் கதவை திறந்ததும் அவரை தள்ளிகொண்டு வீட்டிற்குள் சென்றனர் என்றும் வீட்டிற்குள் அய்யோ அய்யோ என சத்தம் கேட்டது என்றும் சிறிது நேரத்தில் இரண்டு நபர்களான அருணும் மற்றும் சத்தியசீலனும் வெளியில் வந்தார்கள் என்றும்

3) பிறகு இருவரும் வண்டியில் ஏறி போய்விட்டார்கள் என்றும் சிறிது நேரத்தில் சுபார் தலையில்

காயத்துடன் வெளியே வந்தார் என்றும் பேரக்குழந்தை சந்திரலேகாவும் வந்தது என்றும் சிரேஸ் சத்திரம் ரோட்டில் வடக்கு வாசலை நோக்கி சென்றார்கள் என்றும் அப்போது என்ன என்று கேட்டபோது சக்திவேலுவின் தங்கச்சி மகன் அருண் அவனது கூட்டாளிகளுடன் வந்து எங்களை வெட்டிட்டான் என்று சொன்னார் என்றும் நான் வீட்டிற்குபோய்விட்டேன் என்றும் சிறிது நேரத்தல் ஜான்பிரிட்டோ பள்ளி அருகில் ஒரே சத்தமாக இருந்தது என்றும் ஓடி சென்று பார்த்தபோது அற்புதம் தலை சிதைக்கப்பட்டு ரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்தார் என சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

ஒம்/ P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்